9th November 1966]

நிலையில் நஞ்சையாக்கினால், இரண்டு போகமாக்கினால் தீர்வை இரண்டு பங்கு. மூன்று பங்கு போடப்படுவது நியாயமா? இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா: கனம் அங்கத்தினருக்கு விவசாயத்தைப்பற்றித் தெரியும் என்று நினைக்கிறேன். மழை காலங்களில் ஐந்தாறு நாட்கள்தான் அதிகமாகத் தண்ணீர் போகும். அதை வைத்துக்கொண்டு வருஷத்தில் 6 மாதம், 9 மாதம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பது சரியாகாது. மற்ற விவசாயிகள் பாதிக்கப்படாதிருக்கத்தான் இந்த முறை.

மண்ணெண்ணெய்

* 562 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்திற்கு 1965 எப்ரல் முதல் இன்றுவரை மத்திய அரசாங்கம் கிரோசின் & டீசல் எண்ணெய் எவ்வளவு ஒதுக்கியுள்ளது?

கனம் திரு. வெ. ராமையா: கிரோஸின்—2,75,605.3 கிலோ லிட்டர். டீசல் எண்ணெய்—2,74,535.7 கிலோ லிட்டர்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: ஒரு லிட்டர் கிரோசின் வெள்ளெண்ணெய் 50 பைசாவுக்கு விற்கப்படுகிறது. இது சர்க்கார் விதித்துள்ள ரேட்டா?

கனம் திரு. வெ. ராமையா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

The Cauvery Delta

* 563 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the details of the steps taken by the Government to give relief to the ryots affected by the scarcity of water in the Cauvery delta; and

(b) the causes for the precariously low level of water reached of Mettur Dam during the year 1965?

The Hon. Sri V. RAMAIAH: (a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, மெர்க்காராவில் மழை அளவு எப்படிப் பதிவு செய்யப்படுகிறது என்பதை கவனித்துக்கொள்ள நம் அரசாங்கச் சார்பில் எந்த அதிகாரியாவது இருந்து பரிசீலனை செய்து வருகிறார்களா?

கனம் திரு. வெ. ராமையா: எ.இ. அல்லது இ.இ. கிரேடில் போடப்பட்டு இருக்கிறது.

---

[a] Printed as Appendix IX on pages 908–916

திரு. மீ. கலியாணசுந்தரம் : அது இருக்கட்டும். மெர்க்காராவில் அதிக மழை பெய்தாலும் நமக்குத் தொந்தரவாக இருக்கிறது, இல்லை என்றாலும் தொந்தரவாக இருக்கிறது. பழைய காலத்தில் கட்டப்பட்ட மேட்டூர் டாம் மட்டும் நமக்குப் போதாது. அதற்கு மேலோ, கீழோ வேறு ஒரு அணையையும் கட்டும் உத்தேசம் சர்க்காருக்கு இருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : மேட்டூருக்கு மேலே கட்ட முடியாது. கீழே கட்ட ஒப்பந்த அடிப்படையில் நடவடிக்கை
9-30 a.m. நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் கூட மீண்டும் பரிசீலனைக்கு வருகிறது. ஆகவே இப்போது அதைக் குறித்து அதிகமாகக் குறிப்பிட விரும்பவில்லை.

திரு. சா. கணேசன் : மேட்டூருக்கு மேலே ஹொகனேக்கல் போன்ற இடங்களிலே கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற கருத்து ஏற்பட்டு அது ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அப்படியானால் அந்தக் கருத்து சரியென்று சர்க்கார் ஏற்றுக்கொண்டு அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இது மின்சார போர்டாரால் மின்சார உற்பத்திக்காக பரிசீலனை செய்யப்படுகின்ற திட்டம்.

Gang Mazdoors

* 564 *Q*.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to make permanent the gang mazdoors who have put in more than three or five years of continuous service in the department of Highways and Rural Works; and

(*b*) if so, whether effective and immediate steps will be taken to finalise the same ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.

அரிசி விநியோகம்

* 565 **கேள்வி.—திரு. இரா. நாராயணன் :** கனம் உணவு அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் அரியலூர் நகரைச் சேர்ந்த (சர்வ கட்சிக்காரர்கள்) பொது மக்கள் சார்பில், திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்களை அரியலூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் அவர்கள் மூலம் 25—7—1966 தேதியன்று ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகிய மூன்று மாதங்களுக்கு அரியலூர் பஞ்சாயத்திற்கு மட்டும் மாதம் 1,000 (ஆயிரம்) மூட்டை அரிசியாவது விநியோகம் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்களா?